Koviloor Digital Library



சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

அருளிய

மரணமிலாப் பெருவாழ்வும்

(உரையுடன்)

அருள்நெறியும்

ANo: 12886
R65 வள்ளலார்

வெளியீடு :

ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் மடாலயம்

திருவொற்றியூர்

Koviloor Digital Library

Koviloor Digital Library

உ

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

அருளிய

மரணமிலாப் பெருவாழ்வும்

(உரையுடன்)

அருள்நெறியும்

4-4
55
KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 12886
Acc No: 12886

வெளியீடு :
ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் மடாலயம்
திருவொற்றியூர்
1993

உரிமைபதிவு

Koviloor Digital Library

முன்னுரை

அருட்பெருஞ்ஜோதி திருச்சிற்றம்பலம் தனிப்பெருங்கருணை

திருவருட்பிரகாச வள்ளலார் அருளிய ஞானசரியை அல்லது மரணமிலாப் பெருவாழ்வு என்ற தலைப்பில் அமைந்த அருட்பாடல்கள் 28ம் உரையுடனும் உபதேசப் பகுதியில் அமைந்த அருள்நெறியும் கூடிய இச்சிறுநூலைத் திருவொற்றியூர் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் மடாலயம் வெளியிடுகின்றது.

ஞானசரியையின் உரையை வழங்கிச் சிறப்பித்தவர் ஞானமணி, ஞானத்தமிழாகரர், பேராசிரியர், டாக்டர் வை. இரத்தினசபாபதி அவர்கள்.

திரு தி. ந. மாணிக்கம் அவர்களின் பொருட் செலவில் அடக்கவிலையில் இந்நூல் வெளிவருகிறது.

இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கியவர்கள் அவ்வை அச்சுக் கூடத்தார், சென்னை-13.

அனைவருக்கும் மடாலயத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அன்பர்கள் இந்நூலைப்பெற்று ஞானசரியைப் பாடல்களைப் பொருளுடன் ஓதி உணர்ந்து அருள்நெறியில் நின்று, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் திருவருட் பெருங்கருணைக்குப் பாத்திரமான சித்திவளாகமாக நின்று எல்லா நலன்களும் பெற்றும் வழங்கியும் வாழ்வார்களாகுக.

இங்ஙனம்,

மாசிமக நன்னாள்
7—3—1993

ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் மடாலயத்தார்
திருவொற்றியூர்

Koviloor Digital Library

4-LX

1. நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்று எழும் கண்ணீர் அதனால் உடம்பு
நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான
நடத்துஅரசே என்உரிமை நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துதும்நாம் வம்மின் உலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம் சொல்கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில் புகும் தருணம் இதுவே.

தெளிவுரை

மனத்தால் நினைந்து, நெஞ்சத்தால் (புத்தி) உணர்ந்து, சித்தத்தால் நெகிழ்ந்து நிற்போமானால் இயற்கை உண்மைச் சத்திய அனுபவம் உண்டாகும். அதனால் வெளிப்படும் அன்பினால் நிறைந்து, அத்தகைய சத்திய அன்பினால் நீர் ஊற்றுப்போல வெளிப்படும் கண்ணீரால் உடல் முழுவதும் நனைந்து நிற்க வேண்டும்.

அருளமுதே, அருள் நிதியே, ஞான நடம்புரியும் அரசே என் உரிமைத் தலைவனே என்று நாமெல்லாம் அவனைச் சுற்றி சுற்றி வாழ்த்துக் கூறுவோம் வாருங்கள்

உலகியலில் ஈடுபாடு கொண்டவர்களே! மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்து, பிறருக்கும் அதனை வழங்கியிடலாம் வாருங்கள்.

கற்பனை கூறேன்; பொய் சொல்லேன்; சத்தியம் சொல்கிறேன். அருள் நிலையானது பொற்சபையில் சிற்சபையில் புகும் நேரம் இதுவே; வருக.

Koviloor Digital Library

2. புகும்தருணம் இதுகண்டீர் நம்மவரே நான்தான்
புகல்கின்றேன் என்மொழி ஓர் பொய்மொழி என்னாதீர்
உகும்தருணம் உற்றவரும் பெற்றவரும் பிறரும்
உடைமைகளும் உலகியலும் உற்றதுணை அன்றே
மிகுந்தசுவைக் கரும்பே செங்கனியே கோல்தேனே
மெய்ப்பயனே கைப்பொருளே விலையறியாமணியே
தகுந்த தனிப்பெரும்பதியே தயாநிதியே கதியே
சத்தியமே என்றுஉரைமின் பத்தியொடு பணிந்தே.

தெளிவுரை

நம்மைச் சார்ந்தவர்களே! உங்களில் ஒருவனாகிய நான்தான் சொல்லுகின்றேன். ஆண்டவர் பொற்சபையில் சிற்சபையில் புகும் நேரம் இது. அழியும் நிலையை அடைந்த வரும், அதனையே வேண்டிப் பெற்றவரும், மற்றவரும், உடைமைகளும், உலகியற் கொள்கைகளும் உங்களைக் காப்பாற்றும் துணை ஆகா.

சுவைமிகுந்த கரும்பே, செங்கனியே, கொம்புத்தேனே, சத்தியத்தால் விளையும் பயனே, கையின்கண் கிடைத்த பொருளே, விலை எனப்பெறும் ஞானத்தால் அளவிட முடியாத மணியே, தகுதியுடைய ஒப்பற்றதும், பெருமையுடையதும் ஆகிய தலைவனே, தயவுச் செல்வமே, வாழ்க்கையின் முடிவு எனநின்ற கதியே, சத்தியமே என்று, பக்தியோடு வணங்கிச் சொல்லுங்கள்.

Koviloor Digital Library

3. பணிந்து பணிந்து அணிந்து அணிந்து பாடுமினோ உலகீர்
பரம்பரமே சிதம்பரமே பராபரமே வரமே
துணிந்து உவந்த வேதாந்த சுத்த அனுபவமே
துரியமுடி அனுபவமே சுத்த சித்தாந்தமதாய்த்
தணிந்தநிலைப் பெருஞ்சுகமே சமரச சன்மார்க்க
சத்தியமே இயற்கை உண்மைத் தனிப்பதியே என்று
கணிந்து உளத்தே கனிந்து நினைந்து உரைத்திடில் அப்பொழுதே
காணாத காட்சி எலாம் கண்டுகொளல் ஆமே.

தெளிவுரை

உலகியல் நெறியில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களே! மிகப் பணிந்தும் மிக அழகு செய்தும் பாடுவீர்களாக.

மேலான ஆகாயமே, ஞான ஆகாயமே, பரம் அபரம் என்ற இரண்டையும் கடந்த தனிநிலையே, மேலான பொருளே, துணிந்து விரும்பி அமைத்த வேதத்தின் முடிநிலையில் நின்று மறுத்து எழுந்த சுத்த அனுபவமே, துரியத்தின் மேல் நின்ற அருளனுபவமே, சித்தாந்த நிலையை மறுத்துக் கடந்த சுத்த சித்தாந்தமாய் நின்று, மலவெம்மை நீக்கித் தணிந்து நின்ற பெருஞ்சுகமே, சமரச சன்மார்க்க நெறியில் மலர்ந்த சத்திய அனுபவமே இயற்கைச் சத்தியத்தின் ஒப்பற்ற தலைவனே, என்று எண்முறை அமைப்பில் (ஒன்பது) கணக்கிட்டு உள்ளத்தே கனிவுகொண்டு, அறிவால் நினைந்து கூறினால், அப்பொழுது அத்தகைய பதி அருளனுபவம் தோன்றும். இதுவரையில் காணாத காட்சிகளையெல்லாம் காணுதலும் அனுபவித்தலும் ஆகிய அனுபவம் உண்டாகும். சத்தியம்.

Koviloor Digital Library

4. கண்டதெலாம் அநித்தியமே கேட்டதெலாம் பழுதே
கற்றதெலாம் பொய்யேநீர் களித்ததெலாம் வீணே
உண்டதெலாம் மலமே உட்கொண்டதெலாம் குறையே
உலகியலீர் இதுவரையும் உண்மை அறிந்திலிரே
விண்டதனால் என் இனிநீர் சமரச சன்மார்க்க
மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து மெய்ப்பொருள் நன்குணர்ந்தே
எண்தகு சிற்றம்பலத்தே எந்தை அருள் அடைமின்
இறவாத வரம்பெறலாம் இன்பம் உறலாமே.

தெளிவுரை

உலகநெறியில் உழன்று கொண்டிருப்பவர்களே! இதுவரையில் நீங்கள் பார்த்தவையெல்லாம் அழிவனவே; கேட்டவையெல்லாம் குற்றம் உடையனவே; கற்றவையெல்லாம் பொய்யே; களித்து மகிழ்ந்தவையெல்லாம் உயிர்க்கு உறுதி தருபவைகள் அல்ல; உணவாகக் கொண்டவையெல்லாம் இழிந்தவைகளே; உள்ளத்திற் கொண்டனவெல்லாம் குறையுடையவைகளே; இவ்வளவு சொல்லியும் சத்தியத்தை அறியவில்லையே!

இழிந்தவைகளாற் பயனில்லை. இனியாவது நீங்கள் சமரச சன்மார்க்கமென்னும் சத்தியவழியைப் பின்பற்றி, சத்தியப் பொருளை அனுபவித்து, எண்ணத்தாலும் எண்ணிக்கையாலும் அனுபவித்து உணரத்தக்க சிற்றம்பலத்தை அடைந்து அருளனுபவம் பெறுங்கள். அதனால் இறத்தல் என்பதே இல்லாத மேன்மையைப் பெறலாம்; இன்பத்தை அனுபவிக்கலாம்.

Koviloor Digital Library

5. இன்புறலாம் எவ்வுலகும் ஏத்திட வாழ்ந்திடலாம்
எல்லாம் செய்வல்ல சித்தி இறைமையும் பெற்றிடலாம்
அன்புடையீர் வம்மின் இங்கே சமரச சன்மார்க்கம்
அடைந்திடுமின் அகவடிவு இங்கு அனகவடிவாகிப்
பொன்புடை நன்கு ஒளிர்ஒளியே புத்தமுதே ஞான
பூரணமே ஆரணத்தின் பொருள் முடிமேற் பொருளே
வன்புடையார் பெறற்கு அரிதாம் மணியே சிற்சபையின்
மாமருந்தே என்று உரைமின் தீமையெலாம் தவிர்ந்தே.

தெளிவுரை

அன்பை உயிர்க்குணமாகவும் உடைமைக் குணமாகவும் பெற்றவர்களே! இங்கே வாருங்கள். சமரச சன்மார்க்கத்தை அடையுங்கள். ஆன்மாவின் அகவடிவே அனகம் என்னும் அருள்வடிவமாகிப் பொன்னென நிற்க, அதன் பக்கத்தே விளங்கும் அருள் ஒளியே; புதுமை நிறைந்த அமுதே ;ஞான நிறைவே; வேதத்தின் முடிந்த பொருள் மேல் விளங்கும் பொருளே; வலியமனம், செயல் உடையவர்களால் எந்நாளும் பெறுதற்கு இயலாத மணியே; சிற்சபை எனநின்ற ஆன்மாவின் மலம் நீக்கி இன்பம் பெருக்கும் மாமருந்தே என்றுபாடிப் பரவுங்கள்.

மரணம் முதலாகிய தீமைகள் எல்லாவற்றையும் நீக்கிய நிலையில் பேரின்பப் பெரு வாழ்வில் கலந்து இன்புறலாம். எல்லா உலகத்தவரும் புகழுமாறு வாழ்ந்திடலாம். எல்லா வற்றையும் செய்யவல்ல சித்தியைத் தரும் இறைத்தன்மையை நாம் பெறுவதோடு பிறருக்கும் (இடலாம்) வழங்கலாம்.

Koviloor Digital Library

6. தீமைஎலாம் நன்மை என்றே திருவுளம் கொண்டருளிச்
சிறியேனுக்கு அருளமுதத் தெளிவு அளித்த திறத்தை
ஆமயந் தீர்த்து இயற்கை இன்ப அனுபவமே மயமாய்
அம்பலத்தே விளங்குகின்ற அருட்பெருஞ் சோதியை ஓர்
ஓமயவான் வடிவுடையார் உள்ளகத்தே நிறைந்த
ஒருபொருளைப் பெருங்கருணை உடைய பெரும்பதியை
நாம்மருவி இறவாத நலம் பெறலாம் உலகீர்
நல்ல ஒரு தருணம் இது வல்லை வம்மின் நீரே.

தெளிவுரை

உலகியல் நெறியில் உழன்று கொண்டிருப்பவர்களே!

யான் செய்த தீமைகள் எல்லாவற்றையும் நன்மைகளாகவே தம் திருவுள்ளத்தில் ஏற்று, சிறியவனாகிய எனக்கு அருளமுதத்தின் தெளிந்த தெளிவை எல்லையில்லாமல் கொடுத்த வல்லபத்தை; பசுத்துவம் நீக்கி, இயற்கை இன்ப அனுபவமாய் ஆன்மாவில் நின்ற அதே தன்மையாய் அம்பலத்தில் விளங்குகின்ற அருட்பெருஞ் ஜோதியை; ஒப்பற்ற ஓம் என்ற பிரணவ வடிவுடையவர் தம்முடைய உள்ளகத்தே நிறைந்து விளங்கும் ஒப்பற்ற பொருளை; பெருங்கருணை உடைய பெருந்தலைவனை;

இவ்வாறு நால்வகை நிலைகளில் விளங்கும் இறைவனை நாம் கலந்து இறவாத மேன்மையைப் பெறலாம்.

இதுவே நல்ல ஒரு தருணம். நீங்கள் விரைந்து வாருங்கள்.

Koviloor Digital Library

7. நீர் பிறரோ யான் உமக்கு நேய உறவு அலனோ
நெடுமொழியே உரைப்பன் அன்றிக் கொடுமொழி சொல்வேனோ
சார்புறவே அருளமுதம் தந்து எனைமேல் ஏற்றித்
தனித்த பெருஞ் சுகமளித்த தனித்தபெரும் பதிதான்
சீர்பெறவே திருப்பொதுவில் திருமேனி தரித்துச்
சித்தாடல் புரிகின்ற திருநாள்கள் அடுத்த
ஓர்புறவே இதுநல்ல தருணம் இங்கே வம்மின்
உலகியலீர் உன்னியவாறு உற்றிடுவீர் விரைந்தே.

KOVILOOR ANDAVAR
A. No. 12886.
LIBRARY, KOVILOOR

தெளிவுரை

உலகியலில் உள்ளவர்களே!

நீங்கள் எல்லாம் எனக்கு வேறானவர்களோ! உங்களுக்கு நான் ஆன்மநேய ஒருமைப்பாட்டில் அமைந்த உறவு அல்லனோ! எந்நாளும் நிலைக்கும் சத்தியமொழியைச் சொல்வேனேயல்லாமல் கொடு மொழியையும் பேசுவேனோ!

யான் சத்தியச் சார்பை உணர்ந்து அனுபவிக்கும் வண்ணம் அருளமுதம் தந்து என்னை மேல்நிலையில் ஏற்றி, ஒப்பற்ற பெருஞ்சுகத்தை அளித்த பெருந்தலைவன், சிறப்புறவே சத்தியப் பொதுவில் அருள் திருமேனி தாங்கிச் சித்தாடல் புரியும் சத்திய நாட்களை நெருங்கிய ஓர் பகுதியாக அமைந்த இச்சமயம் நமக்கெல்லாம் பொருந்திய நல்ல சமயம். நீங்கள் நினைந்தவைகளை நினைந்தவாறு அடைந்திடுவீர்; விரைந்து இங்கே வாருங்கள்.

Koviloor Digital Library

8. விரைந்து விரைந்து அடைந்திடுமின் மேதினியீர் இங்கே;
மெய்மை உரைக்கின்றேன் நீர் வேறு நினையாதீர்;
திரைந்து திரைந்து உளுத்தவரும் இளமை அடைந்திடவும்,
செத்தவர்கள் எழுந்திடவும், சித்தாடல் புரிய
வரைந்து வரைந்து எல்லாம் செய்வல்ல சித்தன் தானே
வருகின்ற தருணம் இது; வரம்பெறலாம் நீவிர்,
கரைந்து கரைந்து உளம் உருகிக் கண்களின் நீர் பெருகிக்
கருணைநடக் கடவுளை உட்கருதுமினோ களித்தே

தெளிவுரை

உலகியலில் உள்ளவர்களே!

மிக விரைந்து இங்கே வாருங்கள். சத்தியம் சொல்கிறேன். என் சொல்லை வேற்றுமொழியாக எண்ணாதீர்.

தசைகள் திரைந்து உளுத்துப்போனவர்களுங்கூட இளமைபெறவும், செத்தவர்கள் உயிர்பெற்று எழவும் ஆகிய சித்துக்களை விளையாட்டாக, இது, அடுத்தது இது, அதற்கடுத்தது இது என வரையறைப்படுத்திக் காட்டி, எல்லாம் செய்ய வல்ல சித்தனாகிய ஆண்டவர் தானே முற்பட்டு வரும் சமயம் இது. எல்லா மேன்மைகளையும் பெறலாம்.

தனிப்பெருங்கருணைக் கூத்தினை இயற்றுங் கடவுளை நீங்கள் களிப்புடன் கரைந்து, கரைந்து, உள்ளம் உருகிக் கண்களில் நீர் பெருகுமாறு உள்ளகத்தே நினைந்து போற்றுவீர்களாகுக.

Koviloor Digital Library

9. களித்து உலகில் அளவு இகந்த காலம் உலகு எல்லாம்
களிப்பு அடைய அருட்சோதிக் கடவுள் வருதருணம்
தெளித்திடும் எத்தருணம் அதோ என்னாதீர்; இதுவே
செத்தவரை எழுப்புகின்ற திகழ்தருணம் உலகீர்
ஒளித்து உரைக்கின்றேன் அலன்நான் வாய்ப்பறை ஆர்க்கின்றேன்
ஒருசிறிதும் அச்சம்உறேன் உள்ளபடி உணர்ந்தேன்
அளித்திடு சிற்றம்பலத்து என் அப்பன் அருள் பெறவே
ஆசைஉண்டேல் வம்மின் இங்கே நேசம் உடையீரே.

தெளிவுரை

உலகியலில் உள்ளவர்களே!

நீங்கள் உலகில் அளவற்றகாலம் களித்து வாழவும், உலகமெல்லாம் களிப்படைய வும் அருட்சோதிக் கடவுள் எழுந்தருளும் சமயம் இதுவாகும். எங்களையெல்லாம் நேர் நின்று தெளித்துத் திருவருள் வழங்கும் காலமும் உண்டோ என்று ஐயமுறாதீர்; இதுவே செத்தவரை உயிர் பெறச் செய்யும் சமயம்.

நான் மறைத்துப் பேசவில்லை; வாயால் பறை அறைகிறேன் உள்ளதை உள்ளவாறு உணர்ந்தேன் ஆதலினால் நான் ஒருசிறிதும் பயப்படவில்லை.

இங்கே நேசம் உடையவர்களே! சிற்றம்பலத்தில் நின்று வரையாது வழங்கும் என் அப்பன் அருள் பெறுவதற்கு ஆசை இருக்குமேயானால் விரைந்து வருக.

Koviloor Digital Library

10. ஆசை உண்டேல் வம்மின் இங்கே அருட்சோதிப்பெருமான்
அம்மையுமாய் அப்பனுமாய் அருளும் அருளாளன்
ஏசுஅற நீத்துஎனை ஆட்கொண்டு எண்ணியவாறு அளித்தான்
எல்லாம் செய்வல்ல சித்தன் என்உயிரில் கலந்தான்
தேசுஉடைய பொதுவில் அருள்சித்தி நடம் புரியத்
திருவுளம் கொண்டு எழுந்தருளும் திருநாள் இங்கு இதுவே
மோசஉரை என நினைத்து மயங்காதீர் உலகீர்
முக்காலத்தினும் அழியா மூர்த்தம் அடைந்திடவே.

தெளிவுரை

உலகியல் நெறியில் உள்ளவர்களே!

அருட்பெருஞ்சோதிப் பெருமான்; அம்மையும் அப்பனுமாய் நின்று அருள் செய்யும் அருளாளன்; குற்றங்கள் எல்லாம் என்னை விட்டு ஒழியுமாறு செய்து என்னை ஆட்கொண்டு யான் எண்ணியவாறு எனக்கு எல்லாவற்றையும் அளித்தான்.

எல்லாம் செய்யவல்ல சித்தன் என் உயிரில் கலந்தான். அருள் ஒளிவீசும் பொதுவில் நின்று அருட்சித்தித் திருக்கூத்தினைச் செய்வதற்காகத் திருவுளங்கொண்டு எழுந்தருளும் அருள்நாள் இதுவேயாகும்.

உங்களை ஏமாற்றும் உரை இது என நினைந்து மயக்கம் கொள்ளாதீர்! முக்காலத்தினும் அழியாத அருட்சித்தித் திருவுருவை அடைவதற்கு ஆசை உண்டேல் இங்கே வாருங்கள்.

Koviloor Digital Library

11. அடைந்திடுமின் உலகீர் இங்கு இது தருணம் கண்டீர்
அருட்சோதிப் பெரும்பதி என் அப்பன் வருதருணம்
கடைந்த தனித் திருஅமுதம் களித்துஅருத்தி எனக்கே
காணாத காட்சிஎலாம் காட்டுகின்ற தருணம்
இடைந்து ஒருசார் அலையாதீர் சுகம் எனைப்போல் பெறுவீர்
யான்வேறு நீர்வேறு என்று எண்ணுகிலேன் உரைத்தேன்
உடைந்த சமயக் குழிநின்று எழுந்து உணர்மின் அழியா
ஒருநெறியாம் சன்மார்க்கத் திருநெறி பெற்று உவந்தே.

தெளிவுரை

உலகியலீர்!

அருட்சோதிப் பெருந்தலைவனாகிய என் அப்பன் வரஇருக்கும் சமயம் இது; இதுவே சிறந்தது என்று எல்லா வகையாலும் ஆராய்ந்து எடுத்த ஒப்பற்ற அருளமுதத்தை யான் களிப்புடன் அருந்துமாறு ஊட்டி, எனக்குக் காணாத காட்சியெல்லாம் காட்டுகின்ற சமயம் இது. ஒதுங்கி, ஒதுங்கி நின்று ஒருபக்கம் போய் வீணே அலைய வேண்டாம். என்னைப்போல் சுகம் அடையலாம் வாருங்கள். யான் வேறு நீங்கள் வேறு என எண்ணாமையால் இதனைக் கூறினேன். சிறிது சிறிதாக உடைந்து அழிந்துபோன சமயக் குழிநின்று எழுந்து சத்தியத்தை உணருங்கள். ஒப்பற்ற ஒரு நெறியாம் சன்மார்க்கம் என்னும் சத்திய அருள்வழியைப் பெற உவந்து அடைந்திடுங்கள். இதுநல்ல தருணம் ஆகும்.

Koviloor Digital Library

12. திருநெறி ஒன்றே அதுதான் சமரச சன்மார்க்கச்
சிவநெறி என்று உணர்ந்து உலகீர் சேர்ந்திடுமின் ஈண்டு
வருநெறியில் எனை ஆட்கொண்டு அருளமுதம் அளித்து
வல்லப சக்திகளெல்லாம் வழங்கிய ஓர் வள்ளல்
பெருநெறியில் சித்துஆடத் திருவுளம் கொண்டருளிப்
பெருங்கருணை வடிவினொடு வருதருணம் இதுவே
கருநெறி வீழ்ந்து உழலாதீர் கலக்கம் அடையாதீர்
கண்மையினால் கருத்துஒருமித்து உண்மை உரைத்தேனே.

தெளிவுரை

உலகீர்!

அருள்நெறி எனப்பெறும் திருநிலைபெற்ற நெறி ஒன்றே. அதுதான் சமரச சுத்த சன்மார்க்கம் என்ற சிவநெறி என்று உணர்ந்து, அந்நெறியைச் சேருங்கள்.

இறந்து பிறந்து இவ்வுலகில் வரும் நெறியில் நின்ற என்னைத் தானே வந்து ஆட்கொண்டு அருளமுதம் வழங்கியதோடன்றி, வல்லப சக்திகளையெல்லாம் எனக்கு வழங்கிய ஒப்பற்ற வள்ளல், பெரியவனாம் தானே வந்து ஆட்கொள்ளும் பெருநெறியில் வந்து சித்தாடத் திருவுளம் கொண்டருளி, பெருங்கருணை வடிவோடு வருகின்ற சமயம் இது.

சமரச சன்மார்க்க நெறி தவிர ஏனைய நெறி எலாம் பிறப்பை மீண்டும் மீண்டும் தருகின்ற — கருவில் வீழவைத்து வருந்த வைக்கின்ற நெறியாகும். அதில் வீழ்ந்து உழலாதீர். உண்மை நெறிதான் எதுவோ எனக் கலக்கம் அடையாதீர். உங்கள்மேல் கொண்ட இரக்கத்தால், கருத்தாலும் உங்களுடன் கலந்துநின்று சத்தியத்தைச் சொன்னேன்.

Koviloor Digital Library

13. உண்மை உரைக்கின்றேன் இங்கு உவந்து அடைமின் உலகீர்
உரை இதனில் சந்தேகித்து உளறி வழியாதீர்
எண்மையினான் என நினையீர் எல்லாம் செய் வல்லான்
என்னுள் அமர்ந்து இசைக்கின்றான் இது கேண்மின் நீவிர்
தண்மையொடு சுத்தசிவ சன்மார்க்க நெறியில்
சார்ந்து விரைந்து ஏறுமினோ சத்திய வாழ்வு அளிக்கக்
கண்மை தரும் ஒரு பெருஞ்சீர்க் கடவுள் எனப் புகலும்
கருணைநிதி வருகின்ற தருணம் இதுதானே.

தெளிவுரை

உலகியலில் உள்ளவர்களே!

சத்தியம் பேசுகிறேன் இங்கே விரைந்தும் மகிழ்ந்தும் வாருங்கள். யான் சொல்லும் உரையில் சந்தேகங் கொண்டு, அதனால் அக அறிவை அழித்துக் கொள்ளாதீர்கள் (உளறி வழியாதீர்). எதற்கும் வழியற்ற ஏழை என என்னை நினைய வேண்டாம். எல்லாம் செய்கின்ற வல்லமையுடையவன் என்னுள் விரும்பித் தங்கியிருந்து அவனே இசைக்கின்ற இந்த வார்த்தையை நீங்கள் கேளுங்கள்.

பின்பற்றி நடப்பதற்கு மிகவும் தேவையான எளிமையுடன் சுத்த சிவ சன்மார்க்க நெறியில் நின்று, விரைந்து முன்னேறுங்கள்.

அருள்வாழ்வு எனப்பெறும் சத்திய வாழ்வை அளிப்பதற்காக, கண்ணோடிநிற்றல் எனப்பெறும் கண்மையை வழங்கும் ஒப்பற்ற பெரிய சிறப்பையுடைய கடவுள் இவரே என அனைவராலும் ஏத்தப்பெறும் கருணை நிதியம் வருகின்ற சமயம் இதுவே.

Koviloor Digital Library

14. தானே தான் ஆகி எலாம் தான் ஆகி அலனாய்த்
தனிப்பதியாய் விளங்கிடும் என் தந்தையை என் தாயை
வானே அவ்வான் கருவே வான்கருவின் முதலே
வள்ளால் என்று அன்பரெலாம் உள்ளா நின்றவனைத்
தேனே செம்பாகே என்று இனித்திடும் தெள்ளமுதைச்
சிற்சபையில் பெருவாழ்வைச் சிந்தை செய்மின் உலகீர்
ஊனேயும் உடல் அழியாது ஊழிதொறும் ஓங்கும்
உத்தம சித்தியைப் பெறுவீர் சத்தியம் சொன்னேனே.

தெளிவுரை

உலகியலில் உள்ளவர்களே!

தான் என-ஒரு பொருளென உணரப் பெறாத நிலையில் உள்ள பொருளானது தான் என நின்று, பிறகு எல்லாப் பொருள்களிலும் கலந்து நின்று, அவைகள் எல்லாம் தான் அல்ல என நின்று, தனித் தலைவனாக விளங்கிக் கொண்டிருக்கும் என் தந்தையை, தாயை; மிக உயர்ந்த பொருளே, அப்பொருள் தோன்றுவதற்குரிய மூலமே (கருவே); அந்த வான் கருவுக்குரிய மூலமுதற்பொருளே; வள்ளலே என்று அன்பர்களால் எல்லாம் நினைவிற்கொள்ளுமாறு நின்றவனை;

தேனே, செம்பாகே என இனித்திடும் தெள்ளமுதை; சிற்சபையில் பெருவாழ்வு அளிக்கும் வாழ்முதலை, சிந்தியுங்கள்.

ஊன் தன்மையைப் பொருந்திநிற்கும் இந்த உடலானது அழியாமல் ஊழிக் காலங்கள் தோறும் உயர்ந்து விளங்கும் உத்தம சித்தியைப் பெறுவீர். இது சத்தியம்.

Koviloor Digital Library

15. சத்திய வேதாந்தம் எலாம் சித்தாந்தம் எல்லாம்
தனித்தனிமேல் உணர்ந்து உணர்ந்தும் தனை உணர்தற்கு அரிதாய்
நித்திய சிற்சபை நடுவே நிறைந்து நடம் புரியும்
நித்த பரிபூரணனைச் சித்த சிகாமணியை
அத்தகையோர் பெரும்பதியை அருமருந்தை அடியேன்
ஆவியை என் ஆவியிலே அமர்ந்த தயாநிதியைச்
சித்தியெலாம் எனக்கு அளித்த சிவகதியை உலகீர்
சிந்தைசெய்து வாழ்த்துமினோ நிந்தைஎலாம் தவிர்ந்தே.

தெளிவுரை

உலகியலீர்!

சத்தியவேத முடிவுகள் எல்லாம், சத்திய சித்தாந்தம் எல்லாம் தனித்தனியாக நின்றும் மேன்மேல் சென்று உணர்ந்தும் உணர்தற்கு இயலாத தனிமுதலை;

அழியாத சிற்சபையின் நடுவில் நிறைந்து விளங்கி, நடம் செய்யும் நித்திய உயர் நிறைவாய் நின்றவனை;

சித்தத்தில் நின்று நாயக மணியாய் ஒளிர்பவனை;

அத்தகைய அருள் நிலை பெற்றவர்களின் பெருந்தலைவனை;

பெறுவதற்கரிய மருந்து போன்றவனை;

அடியேனின் ஆவியாக விளங்குபவனை;

என் ஆவியில் விரும்பித் தங்கியிருக்கும் தயவுச் செல்வத்தை;

எல்லாவகைச் சித்திகளையும் எனக்கு அளித்த சிவ நெறியைச் சிந்தித்து, நிந்தனைகளைத் தவிர்த்து, வாழ்த்துங்கள்.

Koviloor Digital Library

16. நிந்தையிலார் நெஞ்சகத்தே நிறைந்த பெருந்தகையை
நிலை அனைத்தும் காட்டி அருள்நிலை அளித்த குருவை
எந்தையை என்தனித்தாயை என் இரு கண்மணியை
என் உயிரை என் உணர்வை என் அறிவை
சிந்தையிலே தனித்து இனிக்கும் தெள்ளமுதை அனைத்தும்
செய்யவல்ல தனித்தலைமைச் சிவபதியை உலகீர்
முந்தை மல இருட்டு ஒழிய முன்னுமினோ கரண
முடுக்கு ஒழித்துக் கடைமரண நடுக்கு ஒழித்து முயன்றே.

தெளிவுரை

உலகியல் நிலையில் இருப்பவர்களே!

எடுத்ததையெல்லாம் எதிர்த்தும் குறைகூறியும் பேசுகின்ற வன்மையை ஒழித்தவர் தம் நெஞ்சத்தில் நிறைந்து விளங்கும் பெருந்தகையை; ஆன்ம வளர்ச்சிப் படிகள் எல்லா வற்றையும் இது என்றும் இதன் தன்மை இது என்றும் நேர்நிறுத்திக் காட்டி, இறுதியதாகிய அருள்நிலையை எனக்கு விரும்பித் தந்த குருவை; என் தந்தையை; என்னுடைய ஒப்பற்ற தாயை; என்னுடைய இருகண்களிலும் மணிபோல் விளங்குபவனை; என் உயிராக இருப்பவனை; என் ஞான அனுபவத்தை; என் அறிவுள் அறிவாக இருப்பவனை; என் சிந்தையில் தனிநிலையில் என்றும் மாறாமல் நின்று இனித்துக் கொண்டேயிருக்கும் தெள்ளிய அமுதத்தை; எல்லாவற்றையும் செய்யவல்ல தனித்தலைமை உடைய சிவமாம் பதியை;

நான் நினைந்தேன் என்னுமாறு வருகின்ற கருவிகளின் ஆணவம் நீங்க, இறுதியில் வர இருக்கும் அல்லது கீழ்த்தன்மைப்பட்ட மரணத்தினால் ஏற்படும் அச்சத்தை ஒழித்து, இறையருளை முன்னிட்டுக் கொண்டு முயன்று, முன்னாள் தொட்டு நம்மைப் பற்றி வருகின்ற ஆணவமல இருட்டு ஒழியுமாறு நினைவீர்களாக!

Koviloor Digital Library

17. முயன்று உலகில் பயன் அடையா மூட மதம் அனைத்தும்
முடுகி அழிந்திடவும் ஒரு மோசமும் இல்லாதே
இயன்ற ஒரு சன் மார்க்கம் எங்கும் நிலை பெறவும்
எம் இறைவன் எழுந்தருளல் இது தருணம் கண்டீர்
துயின்று உணர்ந்தே எழுந்தவர்போல் இறந்தவர்கள் எல்லாம்
தோன்ற எழுகின்றது இது தொடங்கி நிகழ்ந்திடும் நீர்
பயின்றறிய விரைந்து வம்மின் படியாத படிப்பைப்
படித்திடலாம் உணர்ந்திடலாம் பற்றிடலாம் சுகமே.

தெளிவுரை

(1) உலகில் பலவாறு முயன்றும் பயன் ஏதும் அடைய முடியாத அறிவற்ற மதங்கள் எல்லாம் விரைந்தோடி அழிந்துபோகவும்;

(2) எந்த ஒரு சிறு ஏமாற்றத்தையோ தராத-மோசடி செய்யாத-எளிய நிலையில் பெரும்பயன் தருவதாக அமைந்த ஒப்பற்ற சன்மார்க்க நெறியானது எங்கும் நிலைத் திருக்கவும் வேண்டி எம் இறைவன் இப்போது எழுந்தருள இருக்கிறான் கண்டு கொள் வீர்களாகுக.

தூங்கி விழித்து எழுந்தவர் போல இறந்தவர்கள் எல்லாம் வெளிப்படையாக எழுகின்ற செயல் இன்று தொடங்கி நிகழும். இவைகளையெல்லாம் நீங்கள் அனுபவித்து அறிய விரைந்து வாருங்கள். இதுவரை படித்தறியாத சாகாத கல்வியைப் படித்திடலாம் அனுபவித்து உணர்ந்திடலாம்; சுகமே அடையலாம்.

Koviloor Digital Library

18. சுகம் அறியீர் துன்பம் ஒன்றே துணிந்து அறிந்தீர் உலகீர்
சூது அறிந்தீர் வாது அறிந்தீர் தூய்மை அறிந்திலிரே
இகம் அறியீர் பரம் அறியீர் என்னே நும் கருத்து ஈது
என்புரிவீர் மரணம் வரில் எங்கு உறுவீர் அந்தோ
அகம் அறிந்தீர் அனகம் அறிந்து அழியாத ஞான
அமுத வடிவம் பெறலாம் அடைந்திடுமின் ஈண்டே
முகமறியார் போல் இருந்தீர் என்னை அறியீரோ
முத்தரெலாம் போற்றும் அருட்சித்தர் மகன் நானே.

தெளிவுரை

உலகியலில் உள்ளவர்களே!

சுகத்தை நீங்கள் இதுவரை அறியவில்லை; துன்பத்தை மட்டுமே விடாப்பிடியாகவும் சத்தியமாகவும் அறிந்தீர். வஞ்சகம், குதர்க்கவாதம் முதலியவைகளை அறிந்தீர்; தூய்மையை அறிவில்லை.

இகம் பரம் என்ற இரண்டிலும் எதுதான் உங்கட் குறிக்கோட் கருத்து என்பதை நீங்கள் அறியவில்லை.

ஐயோ! மரணம் வந்தால் என் செய்வீர்! எங்கே செல்வீர்! அகம் எனப்பெறும் அருள்நிலை அறிந்து, சத்திய ஞானவடிவம் பெறலாம். இப்பொழுதே சமரச சன்மார்க்கம் அடைந்திடுக. முன்பின் முகப்பழக்கம் இல்லாதவர் போல இருந்தீர்! என்னையாரென அறியவில்லையோ! முத்தர்கள் எல்லாம் தொழுது போற்றும் அருட்சித்தரின் மகனே நான் என அறிக.

Koviloor Digital Library

19. நான் உரைக்கும் வார்த்தைஎலாம் நாயகன் தன் வார்த்தை
நம்புமினோ நமரங்காள் நல் தருணம் இதுவே
வான் உரைத்த மணி மன்றில் நடம்புரி எம்பெருமான்
வரவு எதிர் கொண்டு அவன் அருளால் வரங்கள் எலாம் பெறவே
தேன் உரைக்கும் உளம் இனிக்க எழுகின்றேன் நீவிர்
தெரிந்து அடைந்து என் உடன் எழுமின் சித்திபெறல் ஆகும்
ஏன் உரைத்தேன் இரக்கத்தால் எடுத்து உரைத்தேன் கண்டீர்
யான் அடையும் சுகத்தினை நீர்தான் அடைதல் குறித்தே.

தெளிவுரை

நம்மவர்களே! நம் உறவினர்களே!

நான் பேசுகின்ற பேச்சுக்கள் எல்லாம் என் வார்த்தைகள் அல்ல; அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரின் திருவார்த்தை. நம்புங்கள். உயர்ந்தவர்களால் சிறந்து எடுத்துப் பேசப் பெற்ற மணிமன்றத்தில் நடம்புரிகின்ற எம்பெருமானுடைய வருகையை எதிர் பார்த்து, அவனருளால் வரங்கள் எல்லாம் பெறவே, ஆனந்தத்தேன் தேக்கெறியும் ஆன்மா இனிப்படைய எழுகிறேன்.

நீங்கள் எல்லோரும் ஆராய்ந்து ஒருப்பட்டு என் உடன் எழுங்கள். சித்திகள் எல்லாவற்றையும் பெறுதல் ஆகும். ஏன் இவைகளையெல்லாம் எடுத்துக் கூறினேன்? யான் அடையும் சுகத்தையெல்லாம் நீங்களும் அடைய வேண்டும் என்பதை உள்ளிட்ட இரக்கத்தால் எடுத்து உரைத்தேன். காண்பீர்களாக.

Koviloor Digital Library

20. குறித்து உரைக்கின்றேன் இதனைக் கேண்மின் இங்கே வம்மின்
கோணும் மனக்குரங்காலே நாணுகின்ற உலகீர்
வெறித்த உம்மால் ஒரு பயனும் வேண்டுகிலேன் எனது
மெய்யுரையைப் பொய்யுரையாய் வேறு நினையாதீர்
பொறித்த மதம் சமயம் எலாம் பொய் பொய்யே அவற்றில்
புகுதாதீர் சிவம் ஒன்றே பொருள் எனக் கண்டு அறிமின்
செறித்திடு சிற்சபை நடத்தைத் தெரிந்து துதித்திடுமின்
சித்தி எலாம் இத்தினமே சத்தியம் சேர்ந்திடுமே.

தெளிவுரை

நடுநிலையில் இல்லாமல் எக்காலத்தும் முரண்டு செய்கின்ற குரங்கு மனம் காரணமாக, செய்த செயலுக்காக வெட்கப்படுகின்ற உலகத்தவர்களே!

உங்களுடைய முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு உரைக்கிறேன்; இதைக் கேளுங்கள்; இங்கே வாருங்கள். வெற்று நிலையில் இருக்கும் உங்களால் எனக்கு ஒரு பயனும் இல்லை; விரும்பவும் இல்லை. எனது சத்திய மொழியைப் பொய்யுரையாகவோ வஞ்சக உரையாகவோ கொள்ளாதீர்.

இது வரையில் குறிப்பிடப் பெற்ற மதம் சமயம். எல்லாம் பொய்யே. அவைகளிற் புகுந்து அழிய வேண்டாம். சிவம் ஒன்றே பொருள் எனக் கொண்டு தெளியுங்கள். அனைத்து வளங்களையும் செறிவாகத் தந்தருளும் சிற்சபைக் கூத்தைத் தெரிந்து துதியுங்கள்; சித்தியெல்லாம் இப்போதே சத்தியமாக உங்களை வந்தடையும்.

Koviloor Digital Library

21. சேர்ந்திடவே ஒருப்படுமின் சமரச சன்மார்க்கத்
திருநெறியே பெரு நெறியாம் சித்தி எலாம் பெறலாம்
ஓர்ந்திடுமின் உண்ணுதற்கும் உறங்குதற்கும் உணர்ந்தீர்
உலகம் எலாம் கண்டிடும் ஓர் உளவை அறிந்திலிரே
வார்ந்த் கடல் உலகறிய மரணம் உண்டே அந்தோ
மரணம் என்றால் சடம் எனும் ஓர் திரணமும் சம்மதியா
சார்ந்திடும் அம்மரணமதைத் தடுத்திடலாம் கண்டீர்
தனித்திடு சிற்சபை நடத்தைத் தரிசனம் செய்வீரே.

தெளிவுரை

சமரச சன்மார்க்கம் எனப்பெறும் திருவருள் நெறியே எல்லா நெறிகளையும் தன்னுள் மருவ வைத்து உயர்ந்த பெருநெறியாகும். அதன் மூலம் எல்லா வகையான சித்திகளையும் பெறலாம். அதனால் அந்நெறியில் சேர்வதற்கு மன ஒருமைப்பாடு கொள்ளுங்கள்.

உண்பதற்கும் உறங்குவதற்கும் தெரிந்தவர்களே! சற்றே சிந்தியுங்கள். அனைத் துலகையும் நேர் நிறுத்திக் காணும் ஒப்பற்ற தந்திர முறையை இன்னும் நீங்கள் அறிய வில்லையே!

கடல் சூழ்ந்த இந்த நிலவுலகத்தவர் அறியுமாறு இன்று வரையில் மரணம் என்பது ஒன்று உள்ளதே! ஐயோ! மரணம் என்பதைக் கேட்டால் அறிவற்றது எனப்பெறும் சாம்பல் கூட, அதனைச் சம்மதிக்காதே.

உங்களைச் சார வருகின்ற அம்மரணத்தைத் தடுத்து விடலாம். தனித்த நிலை பெற்றிடு சிற்சபைக் கூத்தைக் கண்டு மகிழ்வீர்களாகுக.

Koviloor Digital Library

22. செய்தாலும் தீமைஎலாம் பொறுத்தருள்வான் பொதுவில்
திருநடஞ்செய் பெருங்கருணைத் திறத்தான் அங்கவனை
மெய்தாவ நினைத்திடுக சமரச சன்மார்க்கம்
மேவுக என்று உரைக்கின்றேன் மேதினியீர் எனைத்தான்
வைதாலும் வைதிடுமின் வாழ்த்து எனக் கொண்டிடுவேன்
மனம் கோணேன் மானம் எலாம் போனவழி விடுத்தேன்
பொய்தான் ஓர் சிறிதெனினும் புகலேன் சத்தியமே
புகல்கின்றேன் நீவிர் எலாம் புனிதமுறும் பொருட்டே.

தெளிவுரை

இந்த உலகியலில் உள்ளவர்களே!

தீமைகளை நினைத்தலேயன்றிச் செய்தாலும் பொறுத்தருளுவான்; பொது மன்றில் திருநடஞ் செய்கின்ற பெருங்கருணைச் செயற்பாட்டு வல்லமை உடையவன்; அங்கேயே அவனைச் சத்தியமாகவே அடைய நினைந்திடுக; சமரச சன்மார்க்கத்தைப் பொருந்துக என்று சொல்கிறேன். இவ்வாறு சொல்வதால் என்னை இகழ்ந்தாலும் இகழுங்கள்; மனம் கோணமாட்டேன்; தற்பெருமை என்பவைகளையெல்லாம் அவையவை போன வழியில் விட்டுவிட்டேன்; ஒரு சிறிது கூடப் பொய் சொல்லேன்; நீங்கள் புனிதம் எனப்பெறும் திருவைப் பெறுவதற்காகச் சத்தியமே சொல்கின்றேன்.

Koviloor Digital Library

23. பொருட்டல நும் போகம் எலாம் பொய்யாம் இங்கு இது நான்
புகலுவது என்! நாள்தொறும் நும் புந்தியில் கண்டதுவே
மருட்டு உலகீர் இருட்டு உலகில் மடிவது அழகலவே
மரணம் இலாப் பெருவாழ்வில் வாழவம்மின் இங்கே
பொருள் திறம் சேர் சுத்தசிவ சன்மார்க்க நிலையில்
பொருந்துமின் சிற்சபை அமுதம் அருந்துமின் அன்புடனே
அருள் திறம் சேர்ந்து எண்ணியவாறு ஆடுமினோ நும்மை
அடுப்பவரே அன்றி நின்று தடுப்பவர் மற்று இலையே.

தெளிவுரை

இவ்வுலகில் இப்போது நீங்கள் அனுபவிப்பன எல்லாம் சத்தியத்தன்மை உடையன அல்ல; பொய்யே. இதை இங்கே நான் சொல்ல வேண்டியதில்லை; நாள் தோறும் உங்கள் மத்தியில் ஆராய்ந்து கண்டவைகளே. மயக்கம் நிறைந்த - மருட்டு கின்ற பொய்மைகளைக் கொண்ட உலகத்தவர்களாகிய நீங்கள் அறியாமை என்ற இருள் நிறைந்த உலகில் வாழ்வது அழகல்லவே; மரணமிலாப் பெருவாழ்வில் வாழலாம் வாருங்கள்.

இவ்வுலகில் சத்தியத் திறம் வாய்ந்த சுத்தசிவசன்மார்க்க நிலையில் இணையுங்கள்; சிற்சபை அமுதம் அருந்துங்கள்; அன்பின் வழி நின்று அருள் தன்மையைப் பற்றி எண்ணி, எண்ணியவாறு, அருளில் திளைத்து விளையாடுங்கள்.

நீங்கள் அருளில் திளைத்து ஆடும்போது உங்களை அடுத்து நின்று அனுபவிக்க வருபவர்கள் இருப்பார்களேயல்லாமல், உங்களைத் தடுத்து நிற்பவர் யாரும் இல்லை.

Koviloor Digital Library

24. மற்று அறிவோம் எனச் சிறிது தாழ்த்திருப்பீர் ஆனால்
மரணம் எனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ
சற்றும் அதை நும்மாலே தடுக்க முடியாதே
சமரச சன்மார்க்க சங்கத்தவர்கள் அல்லால் அதனை
எற்றி நின்று தடுக்க வல்லார் எவ்வுலகில் எவரும்
இல்லை கண்டீர் சத்தியம் ஈது என்மொழி கொண்டு உலகீர்
பற்றிய பற்று அனைத்தினையும் பற்று அற விட்டு அருள்அம்
பலப் பற்றே பற்றுமினோ எற்றும் இறவீரே.

தெளிவுரை

உலகியலில் இருப்பவர்களே!

சிறிது காலம் பொறுத்திருந்து, பின்னர் அதைப்பற்றிச் (மரணமிலாப் பெருவாழ்வு) சிந்திப்போம் என்று காலம் தாழ்த்துவீர்களேயானால் ஐயோ! மரணம் என்ற பெரும் பாவி வந்திடுமே! அதைச் சிறிதும் உங்களால் தடுக்க முடியாதே! சமரச சன்மார்க்க சங்கத்தவர்கள் அல்லால் மற்றவர்களால் அதனைக் காலால் எற்றி நின்று தடுக்கும் வல்லமையுடையவர்கள் எந்த உலகில் யார் தான் இருக்கிறார்கள்! இது சத்தியம். யான் சொல்லும் இம்மொழி கொண்டு, நீங்கள் பற்றிய எல்லாப்பற்றுக்களையும் பற்றற விட்டொழியுங்கள். அருள் அம்பலப்பற்றையே உறுதியாகப் பற்றுங்கள். எக்காலத்தும் மரணம் அடையமாட்டீர்.

Koviloor Digital Library

25\. இறந்தவரை எடுத்திடும்போது அரற்றுகின்றீர் உலகீர்
இறவாத பெருவரம் நீர் ஏன் அடைய மாட்டீர்
மறந்திருந்தீர் பிணி மூப்பில் சம்மதமோ நுமக்கு
மறந்தும் இதை நினைக்கில் நல்லோர் மனம் நடுங்கும் கண்டீர்
சிறந்திடு சன்மார்க்கம் ஒன்றே பிணி மூப்பு மரணம்
சேராமல் தவிர்த்திடுங்காண் தெரிந்து வம்மின் இங்கே
பிறந்த பிறப்பு இதில் தானே நித்திய மெய் வாழ்வு
பெற்றிடலாம் பேரின்பம் உற்றிடலாம் விரைந்தே.

தெளிவுரை

உலகியலில் இருப்பவர்களே!

செத்தவரைத் தூக்கும்போது அரற்றி அழுகிறீர்களே! இறவாத பெருவாழ்வை அடைவதற்கு ஏன் முயற்சி செய்யமாட்டேன் என்கிறீர்! மரணத்தைப்பற்றி மறந்திருக்கிறீர்! பிணி, முதுமை என்பவை உங்களுக்குச் சம்மதமா? மறந்துகூட இவை களை நினைத்துவிட்டால் அருளாளர் மனம் நடுங்குவதைக் கண்டிருக்கிறீர்களே!

நோய், முதுமை, மரணம் ஆகியவை நம்மைத் தாக்காதவாறு அவைகளைத் தவிர்க்கும் வல்லமை வாய்ந்தது சன்மார்க்க நெறி ஒன்றே. ஆராய்ந்து வாருங்கள்.

இவ்வுலகில், பிறந்த இப்பிறப்பில் தானே மரணம் தாக்காத சத்திய வாழ்வைப் பெற்றிடலாம். அதுமட்டுமேயன்றி, பேரின்பப் பெருவாழ்வை விரைந்து பெற்றிடுதலும் ஆகும்.

Koviloor Digital Library

26. உற்றமொழி உரைக்கின்றேன் ஒருமையினால் உமக்கே
உறவன் அன்றிப் பகைவன் என உன்னாதீர் உலகீர்
கற்றவரும் கல்லாரும் அழிந்திடக் காண்கின்றீர்
கரணம் எலாம் கலங்கவரும் மரணமும் சம்மதமோ
சற்றும் இதைச் சம்மதியாது என் மனம் தான் உமது
தன் மனம் தான் கல்மனமோ வன்மனமோ அறியேன்
இற்று இதனைத் தடுத்திடலாம் என்னொடும் சேர்ந்திடுமின்
என் மார்க்கம் இறப்பு ஒழிக்கும் சன்மார்க்கம் தானே.

தெளிவுரை

உலகியலில் இருப்பவர்களே!

ஆன்மநேய ஒருமைப்பாடு காரணமாக உங்களுக்குப் பொருத்தமுறும் வார்த்தையை நான் பேசுகிறேன்.

உங்களுக்கு உறவினனேயன்றிப் பகைவன் என என்னை நினைக்காதீர்கள்.

படித்தவரும் படியாதவரும் அழிந்து போவதைக் காண்கிறீர்களே, கருவிகளெல்லாம் கலக்கமடையுமாறு வருகின்ற மரணம் உங்களுக்குச் சம்மதமா? என்மனம் சிறிதளவும் மரணத்தைச் சம்மதிக்கவில்லை. உங்களுடைய மனம் என்ன கல்மனமோ அல்லது வலிமை வாய்ந்த மனமோ யான் அறியேன்.

என்னோடு சேர்ந்து விடுங்கள், இப்பொழுதே மரணத்தை நாம் தவிர்த்து விடலாம்.

என்மார்க்கம் மரணத்தை முற்றாக ஒழிக்கும் வல்லமை வாய்ந்த சத்திய மார்க்கமாகும்.

Koviloor Digital Library

27. சன்மார்க்கப் பெருங்குணத்தார் தம்பதியை என்னைத்
தாங்குகின்ற பெரும்பதியைத் தனித்த சபாபதியை
நன்மார்க்கத்து எனை நடத்திச் சன்மார்க்க சங்க
நடு இருக்க அருளமுதம் நல்கிய நாயகனைப்
புன்மார்க்கர்க்கு அறிவரிதாம் புண்ணியனை ஞான
பூரண மெய்ப் பொருளாகிப் பொருந்திய மாமருந்தை
அன்மார்க்கம் தவிர்த்தருளி அம்பலத்தே நடஞ் செய்
அருட் பெருஞ் சோதியை உலகீர் தெருள் கொளச்சார்வீரே.

தெளிவுரை

உலக இயலில் இருப்பவர்களே!
சன்மார்க்கந் தழுவிய பெருந்தகைகளின் தலைவனை;
தயையுடன் என்னைத் தாங்குகின்ற பெருமைத் தலைவனை;
ஒப்பற்ற நிலையில் யான் சபையாக நின்று தாங்க என்மேல் ஆடும் சபாபதியை;
அருள் வழியில் என்னை நடத்திச் சென்று சத்திய நெறியாளர் கூட்டத்தில் நடு நின்று வாழ்வுபெறுமாறு என்னை நிறுத்தி அருளமுதம் அருளிய தலைவனை;
இழிநெறியில் நின்றவர்களால் அறியமுடியாத புண்ணியனை;
ஞான நிறைவாய்ச் சத்தியப் பொருளாகிப் பொருந்தியிருக்கும் மாமருந்தை;
அசத்திய நெறியை நீக்கியருளி அம்பலத்தே நடமாடும் அருட்பெருஞ்சோதியை;
நீங்களெல்லாம் அருளால் பிறக்கும் தெளிவைப் பெறுவதற்காகச் சென்று சேர்வீர்களாகுக.

Koviloor Digital Library

28. சார் உலக வாதனையைத் தவிர்த்து அவர் உள்ளகத்தே
சத்தியமாய் அமர்ந்தருளும் உத்தம சற்குருவை
நேர் உறவே எவராலும் கண்டு கொளற்கு அரிதாம்
நித்திய வான்பொருளை எலா நிலைகளும் தான் ஆகி
ஏர் உறவே விளங்குகின்ற இயற்கை உண்மை தன்னை
எல்லாம் செய் வல்லபத்தை எனக்கு அளித்த பதியை
ஓர் உறவு என்று அடைந்து உலகீர் போற்றி மகிழ்ந்திடுமின்
உள்ளமெலாம் கனிந்துருகி உள்ளபடி நினைந்தே.

KOVILOOR ANDAVAR * KOVILOOR LIBRARY, KOVILOOR A. No. 1288

தெளிவுரை

உலக இயலில் இருப்பவர்களே! உலகம் தழுவிய துன்பங்களை நீக்கி, அவர்தம் ஆன்மாவின் உள்ளே சென்று அழியாமல் அமர்ந்து அருள் செய்து வாழவைக்கும் உத்தம, சத்தியக்குருவை;

நேருக்குநேர் என நின்று எவராலும் ஆராய்ந்து அறிவதற்கு அரிதாகும் நித்தியமான உயர்பொருளை;

எல்லா நிலைகளாகவும் தானேநின்று அழகு பொருந்த விளங்குகின்ற இயற்கை உண்மை எனப்பெறும் சத்தியத்தை;

எல்லாவற்றையும் இயற்றும் ஆற்றலைத் தானே விரும்பி எனக்கு அளித்த தலைவனை;

ஓர் உறவு என அடைந்து, உள்ளமெல்லாம் கனிந்து உருகி, உள்ளவாறு நினைந்து, புகழால் பரவித் துதிசெய்து மகிழ்ந்திடுவீராக.

Koviloor Digital Library

அருள்நெறி

திருச்சிற்றம்பலம்

கடவுளது திருவருளை எவ்வாறு பெறக்கூடும்? அருளென்பது கடவுள் தயவு. ஜீவகாருண்ய மென்பது ஜீவர்கள் தயவு. ஆதலால் சிறு வெளிச்சத்தைக்கொண்டு பெரு வெளிச்சத்தைப் பெறுவதுபோல், சிறிய தயவாகிய ஜீவ தயவைக் கொண்டு பெருந் தயவாகிய கடவுளருளைப் பெறவேண்டும்.

அக் கடவுள் தயவாகிய அருள் எத்தன்மையுடையது? நமது ஆன்ம அறிவாகிய புத்தி தத்துவத்தினுக்கு நன்மை தீமையை விளக்கிக்காட்டுவதாயும், வேதாகம கலை களைக் கொண்டு நன்மையாதிகளை விதிப்பதாயும், அறிபவர்களின் தரத்திற் கொத்த தாயும், அறிபவர்கள் எந்த வஸ்துவை அறிகின்றார்களோ அந்த வண்ணமாயும் உள்ளது.

அத் தன்மையான அருள் பிண்ட அண்டத்தில் எவ்வண்ணமாய் விளங்குகின்றது? காண்பார் காணுமிடம் காணப்படுமிடம், அறிவார் அறியுமிடம் அறியப்படுமிடம், தூண்டுவார் தூண்டுமிடம் தூண்டப்படுமிடம், சுவைப்பார் சுவைக்குமிடம் சுவைக்கப்படு மிடம், அனுபவிப்பார் அனுபவிக்குமிடம் அனுபவிக்கப்படுமிடம், கருதுவார் கருதுமிடம் கருதப்படுமிடம், முகருவார் முகருமிடம் முகரப்படுமிடம், கேட்பார் கேட்குமிடம் கேட்கப்படுமிடம் முதலியவாய் விளங்கும்.

இவ் வண்ணம் விளங்கும் அருளை நாம் பெறுவதற்கு உபாயம் என்ன? புத்தி தத்துவத்தால் நன்மை தீமையை விசாரித்து, நன்மையே உருவாய் விளங்கும்

Koviloor Digital Library
பெரியாரைத் துணைக்கொண்டு, அவரால் கட்டளையிடும் திருப்பணியைக் கைக்கொண்டு இடையறாது, செய்யில், அவ்வருளைப் பெறலாம்.

நன்மை தீமை என்பவை யாவை? நன்மை தீமை யென்பவை புண்ணிய பாவம். புண்ணிய மென்பது ஆரம்பத்தில் செய்வதற்கும் அனுபவிப்பதற்கும் முயற்சிப்பதற்கும் துக்கமாயும், பின் சுகமாயும் விளங்கும். பாவ மென்பது ஆரம்பத்தில் சுகமாயும் பின் துக்கமாயும் இருக்கும்.

புண்ணிய பாவங்கள் நம்மை எவ்வாறடைகின்றன? மனம் வாக்கு காயம் என்னும் மூன்றினாலும் அடையும். மேலும், மனத்தினிடத்தில் நால்வகையும், வாக்கினிடத்தில் நால்வகையும், சரீரத்தினிடத்தில் நால்வகையும், ஆகப் பன்னிரண்டு வகையாய் நம்மை யடையும், அவையாவன:— மனத்தினால் பரதாரகமனம் பண்ண நினைத்தல், அன்னியருடைய சொத்தைக் கிரகிக்க நினைத்தல், அன்னியருக்குத் தீங்குசெய்ய நினைத்தல், முடியாத காரியங்களை நினைத்து அக்காரியம் அன்னியர்களுக்கு முடிந்ததை நினைத்துப் பொறாமையடைதல் — இவை நான்கும் மனத்தினால் செய்யும் பாவங்கள். வாக்கினால் பொய்சொல்லல், கோட்சொல்லல், புறங்கூறல், வீணுக்கழுதல்–இவை நான்கும் வாக்கினால் உண்டாகும் பாவங்கள். தேகத்தினால் பிறர் மனைவியைத் தழுவுதல், புசிக்கத்தகாத வேத விரோத ஆகாரங்களைப் புசித்தல், அன்னியர்களை இம்சை செய்தல், தீங்கு செய்கிறவர்களைத் தடுக்காமல் அவர்களுக்கு உபகாரஞ் செயதல்–இந்நான்கும் தேகத்தாலுண்டாகும் பாவங்கள். இவை போன்றவைகளைத் தவிர்த்து அன்னியர்களுக்கு நன்மை யுண்டாக நினைத்தல், பொறாமையடையா திருத்தல், அன்னியர் சொத்தைத் தனதாக்க எண்ணாதிருத்தல், தனது மனைவி தவிர அன்னியமான பெண்ணைத் தாய் சகோதரி முதலியவர்களாகச் சிந்தித்தல் — இவை

Koviloor Digital Library

மனத்தால் வரும் புண்ணியங்கள். பொய் சொல்லாமை, கோட் சொல்லாமை, இன்சொல்லாடல், தோத்திரம் செய்தல் — இவை நான்கும் வாக்கினா லுண்டாகும் புண்ணியங்கள். அன்னியர்களுக்குத் தீங்குண்டாகுங்கால் விலக்கல் முதலான நன்மை யான கிருத்தியங்ளெல்லாம் தேகத்தாலுண்டாகும் புண்ணியங்கள்.

அறிந்து செய்த பாவங்களும் அறியாது செய்த பாவங்களும் எவ்வாறு நீங்கும்? அறிந்த பாவங்கள் செய்தபின், தனக்குப் பாவம் செய்ததாக எவ்வகையிலாவது தெரிந்த பின், "நாம் பாவச் செய்கையை முன்னமே தெரிந்தும், மோகத்தாலும், மறதியாலும், அபிமானத்தாலும், அகங்காரத்தாலும், செல்வச் செருக்காலும், தாக்ஷிண்ய உடன் பாட்டாலும், உணவு பற்றியும், புகழ் பற்றியும், வழக்கம் பற்றியும் செய்து விட்டோமே!" என்று பச்சாத்தாபப் பட்டுப் பெரியோர்களை யடுத்து, அவர்களால் நியமனம் செய்யப் படும் பிராயச்சித்தங்களைக் கைக்கொண்டு, அவ்வண்ணம் இச்சரீரத்தைத் தவத்தாலும் விரதத்தாலும் இளைக்கச் செய்வதுமன்றி; யாத்திரையாதிய மேற்கொண்டு, புண்ணிய ஸ்தலங்களிற் சென்று வசித்து, இயன்ற அளவில் அன்ன விரயஞ் செய்தால் நீங்கும். மேலும், சத்தியற்றவர்களாயும் வார்த்திகர்களாயுமுள்ளவர்கள் மகான்களுக்குத் தொண்டு செய்தால் நீங்கும். மகான்கள் நேரிடாத பக்ஷத்தில், பச்சாத்தாபத்துடன் பாவ காரியங் களைச் செய்யாமலும், பாவிகளுடைய கூட்டத்தில் பழகாமலும், திருவருளைச் சிந்தித்து அவர்கள் தரத்திற் கொத்த தெய்வங்களைச் சிந்தித்துக் கொண்டிருந்தால் நீங்கும்.

அறியாத பாவங்கள் யாவெனில், நடக்குங் காலத்திலும், நீராடுங் காலத்திலும், சயன காலத்திலும், தனக்குத் தோன்றாமல் நேரிடும் பாவங்களாம். இதன்றி அவை மனத் திற்குப் புலப்படாமலும் உண்டாகும். இவைகள் யாவும் தினஞ் செய்யுஞ் ஜபத்தாலும், பாராயணத்தாலும், ஸ்தோத்திரத்தாலும், விருந்துபசரித்தலாலும் தெய்வம் பராவலாலும் நீங்கும்.

Koviloor Digital Library

பிராயச்சித்த முதலியவைகள் செய்யாவிட்டால் பாவங்களாலடையுங் கதியென்ன? மனத்தால் செய்யும் பாவங்கட்குச் சண்டாளாதி சரீரமுண்டாகும். வாக்காற் செய்த பாவங்கட்கு மிருகம் முதலான சரீரமுண்டாகும். தேகத்தால் செய்யும் பாவங்கட்கு மரம் முதலான சரீரமுண்டாகும்.

வேதாந்திகள் "பாவம் முதலிய கருமங்களும். புண்ணியம் முதலிய ஏதுக்களும் நமக்கில்லை, நாம் சர்வசாக்ஷி" என்கின்றார்களே — அஃதென்ன? தேகவாசனை, இந்திரிய வாசனை, கரணவாசனை, பிராண வாயுவின் செயற்கையிலுண்டாகும் வேறுபாடு முதலிய நன்மைகளில் சலிப்பற்று ஆகாரம், நித்திரை, பயம் முதலியவைகளில் தாம் சலித்தும் சோர்ந்தும் திடுக்கிட்டும் இல்லாமல் நிவாததீபம் போல் விளங்கும் ஜீவன் முத்தர்கள் சமூகத்தில் பாவ கிருத்தியங்கள் நடவா; புண்ணியங்களும், பிரயோஜனம் பற்றிச் செய்யார்கள்; பொன்னும் ஓடும் சரியாகக் காண்பார்கள். அத் தன்மையுடைய நித்திய முத்த சுத்த ஞானதேக சித்தர்கட்குப் பாவபுண்ணியமில்லையென்று அவர்கள் சொல்ல வேண்டியதில்லை; நமக்கே தெரியும்.

மேலும், அவர்கள் இந்தப் பவுதிக சரீரத்தில் வசித்தாலும், சரீரமாகிய தத்துவ தாத்விகங்கள் இப்போது நமக்கு அசுத்த தேகமாயும் அசுத்தப் பொறியாயும் அசுத்தக் கரணமாயும் அசுத்த அனுபவமாயும் அசுத்த அறிவாயும் இருப்பது போல் இரா. தத்த படத்தைப் போல் காரியத்தில் இலதாயும் காரணத்திலுளதாயும், அறிவேவடிவாய் அறிவேபொறியாய் அறிவேமனமாய் அறிவேயழகாய் அறிவேயுருவாய் அறிவேயுணர்வாய் அறிவேயனுபவமாய் அறிவேயறிவாய் விளங்கும்.

திருச்சிற்றம்பலம்

அருள்நெறி முற்றிற்று.

[விலை ரூ 4-00